செய்தி வெளியீடு எண்: 424 நாள்: 13.07.2019

செய்தி வெளியீடு

# மறைமலை அடிகளாரின் சிலைக்கு மாலை அணிவித்துச் சிறப்புச் செய்தல் 15.07.2019

மறைமலை அடிகளாரின் இயற்பெயர் வேதாச்சலம். இவர் வடமொழியில் இருந்த தனது பெயரை தனித்தமிழில் மறைமலையடிகள் என மாற்றிக்கொண்டார். மறைமலையடிகள் அவர்கள் 1876ஆம் ஆண்டு சூலை 15ஆம் நாள் காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கழுக்குன்றத்தில் பிறந்தவர். இவர் 1950 செப்டம்பர் 15 ஆம் நாள் மறைந்தார். இவர் ஒன்பதாம் வகுப்பு வரை மட்டுமே பள்ளியில் பயின்றவர். பின்னர் நாகப்பட்டினத்தில் தமிழ்ப்புலமை மிக்க நாராயணசாமி பிள்ளை என்பவரிடம் தமிழ்க் கற்றார். மேலும், சைவ சித்தாந்த சண்டமாருதம் என்று புகழ்ப்பெற்றிருந்த சோமசுந்தர நாயக்கரிடம் சைவ சித்தாந்தம் கற்றவர். சென்னை கிறித்துவக் கல்லூரியில் பரிதிமாற் கலைஞருடன் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். 1905இல் சைவ சித்தாந்த மகா சமாசம் என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். மேலும் 22.04.1912இல் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தைத் தொடங்கினார். பின்னர், ‘தனித்தமிழ்’ ஈடுபாட்டால், அதனை பொதுநிலைக் கழகம் என பெயர் மாற்றினார். திருமுருகன் என்ற அச்சகத்தை ஏற்படுத்தி பல நூல்களை வெளியிட்டும் மணிமொழி நூல் நிலையம் எனும் நூலகத்தையும் உருவாக்கியவர். திராவிட மஞ்சரி, பாசுகர ஞானோதயம், நீலலோசனி, ஞானசாகரம் ஆகிய இதழ்களில் இவரது கட்டுரைகள் வெளிவந்தன. பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு ஆகிய நூல்களுக்கு ஆராய்ச்சியுரையும் திருவொற்றியூர் முருகன், மும்மணிக்கோவை, சோமசுந்தரக் காஞ்சியாக்கம் முதலிய செய்யுள் நூல்களையும், சிந்தனைக் கட்டுரைகள், அறிவுரைக் கொத்து, சிறுவர்களுக்கான செந்தமிழ், முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர் போன்ற கட்டுரை நூல்களையும், குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி, கோகிலாம்பாள் கடிதங்கள் முதலிய புதினங்களையும் எழுதியுள்ளார். வடமொழியில் காளிதாசர் எழுதிய சாகுந்தலத்தை மொழிபெயர்த்து சாகுந்தல நாடகம் என்ற பெயரில் நூலையும், அம்பிகாபதி அமராவதி என்ற நாடக நூலையும், சைவ சித்தாந்தமும் செயல்முறையறிவும் என்று ஆங்கில நூலையும் எழுதியுள்ளார். இவர், சைவம், தமிழ் இரண்டையும் தம் இரு கண்களாகக் கருதியவர்.

“பெற்ற தாய் தனை மகமறந்தாலும் பிள்ளையைப்
பெறும் தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
. . .. . . . . . . . . . . . . . . .
,. . . . . . . . . . . . . . . . . .
நற்றவத்தவர் உள்ளிருந் தோங்கும் நமச்
சிவாயத்தை நான் மறவேனே’’.

எனும் இராமலிங்க வள்ளலார் அருளிச் செய்த பாடலை தனது மகள் நீலாம்பிகையாருடன் பாடும் போது இப்பாட்டில் உள்ள ‘**தேகம்**’ என்ற வடசொல்லை நீக்கி அவ்விடத்தில் ‘**யாக்கை**’ என்ற தமிழ்ச்சொல் இருக்குமானால் செய்யுளின் ஓசையின்பம் இன்னும் இனிமையாக இருக்கும் என மகள் கூறியதைத் கேட்டு, ‘இனி அயன்மொழிச் சொற்களை நீக்கித் தனித்தமிழிலே பேசுதல்

வேண்டும்’ என முடிவெடுத்ததன் விளைவாக **தனித்தமிழ் இயக்கம்** இவரால் தோற்றுவிக்கப்பட்டது. இவர் காலத்தில் புகழ்பெற்ற தமிழ் அறிஞர்களான மனோன்மணீயம் சுந்தரனார், கதிரைவேலர், திரு.வி.க., நாவலர் ச.சோமசுந்தர பாரதியார், உ.வே.சா., தணிகைமணி வ.சு. செங்கல்வராயர், ரசிகமணி டி.கே. சிதம்பரநாதர், ச. வையாபுரியார், கோவை இராமலிங்கம், சுப்பிரமணிய பாரதியார், மீனாட்சி சுந்தரனார் ஆகிய தமிழறிஞர்கள் வாழ்ந்த காலம். இத்தகைய சிறப்பு வாய்ந்த ‘தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை’ மறைமலையடிகளார் அவர்களின் புகழ்ப் பரப்பும் வகையில் காஞ்சிபுரம் மாவட்டம், பல்லவபுரத்தில் உள்ள அவரது நினைவு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரின் திருவுருவச் சிலைக்கு அவருடைய பிறந்த நாளான சூலை 15ஆம் நாளன்று ஆண்டுதோறும் மாலை அணிவித்து மலர்தூவி சிறப்புச் செய்யப்படும் என மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களால் தமிழ் வளர்ச்சித் துறைக்கான 2018–19ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பெற்றது.

அவ்வறிவிப்பிற்கிணங்க, காஞ்சிபுரம் மாவட்டம், பல்லவபுரத்திலுள்ள மறைமலையடிகளார் அவர்களின் நினைவு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு 143 ஆவது பிறந்த நாளான 15.07.2019 திங்கள்கிழமை காலை 7.00 மணிக்குத் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாலை அணிவித்து, அவர்தம் திருவுருவப் படத்திற்கு மலர்தூவிச் சிறப்பிக்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழறிஞர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**